விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றிய செ.புதூர் ஊராட்சி மன்றத்தலைவர்
அவர்களின் நடவடிக்கை
முன்னிலை : திரு.நிர்மலாதேவி அந்தோணிசாமி

ந.க.எண்.13673/2023/TCP நாள் :05.01.2024

பொருள் : விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் - செ.புதூர் ஊராட்சி - சர்வே எண்.265/3-ல் 9350 சதுரமீட்டர், 2.31 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள 40 மனைகள் கொண்ட மனைப்பிரிவு அங்கீகாரம் சார்பு.

பார்வை :
1. அரசு ஆணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD(3)) துறை நாள் : 04.05.2017.
2. விழுப்புரம் மண்டலம், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களின் கடிதம் ந.க.எண்.168/2023 நாள்:06.10.2023.
3. செ.புதூர் ஊராட்சி தீர்மான எண்.93, நாள் : 05.01.2024.
4. மனுதாரர் R.புகழேந்தி த/பெ. ரங்கநாதன் என்பவரது விண்ணப்ப நாள் 02.01.2024.

***

உத்தரவு,

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், செ.புதூர் ஊராட்சி சர்வே எண்.265/3ல் 2.31 ஏக்கர் அல்லது 9350 சதுரமீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள 40 மனைகள் கொண்ட மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் மற்றும், ஒப்புதல் அளிக்கும் பொருட்டு பார்வை 1-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் விழுப்புரம் அவர்களின் உத்தரவில் குறிப்பிட்டுள்ளபடி பார்வை 4-ல் கண்டுள்ள மனுதாரர் உள்ளாட்சி அமைப்பிற்கு சாலை மற்றும் தெருக்கள் அரசு விதிமுறைகளின்படி தானமாக பத்திரப்பதிவு செய்து வழங்கியுள்ளார். மேலும் அரசுக்கு செலுத்த வேண்டிய கூராய்வு கட்டணம், நன்னிலவரி, கொடிநாள் நிதி மற்றும் நில பயன்மாற்றுக் கட்டணங்களை உரிய அரசு தலைப்புகளில் செலுத்தி அதற்கான சலான்கள் சமர்ப்பித்துள்ளார்.

ஆகவே தமிழ்நாடு அரசு விதிமுறைகளின்படி நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் விழுப்புரம் அவர்களின் கோப்பு எண்.168/2023, நாள் : 06.10.2023 உத்தரவில் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்படி ச.எண்.265/3-ல் அமைக்கப்பட்டுள்ள 40 மனைகள் கொண்ட மனைப்பிரிவிற்கு ஒப்புதல் மற்றும் அங்கீகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

தலைவர்,
ஊராட்சி மன்ற தலைவர்,
அ.தூதாரி ஊராட்சி,
விக்கிரவாண்டி ஒன்றியம்.
விழுப்புரம் மாவட்டம் -605 203.

இணைப்பு :
அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு நீல வரைபடங்கள்.

பெறுதல்

நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், விழுப்புரம்.

நகல் : சார்பதிவாளர், அனந்தபுரம்.

நகல் : உதவி இயக்குநர் (ஊராட்சிகள், விழுப்புரம் தாலுக்கா பணிந்தனுப்பப்படுகிறது)

நகல் : திரு.R.புகழேந்தி த/பெ.ரங்கநாதன்,
எண்.6/800, மேட்டுத்தெரு, அய்யூர்அகரம் மதுரா,
சிந்தாமணி, விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.